இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 06-06-2025

# கல்விக்காக அமெரிக்காவுடன் பேச வேண்டும்!

அமெரிக்க அதிபர் டிரம்ப் அதிரடிகள் அந்த நாட்டில் தொடர்ந்து வருகிறது. அது அந்த நாட்டின் பிரச்சினை ஆகும். அதே நேரத்தில் அமெரிக்காவுக்கு வந்து படிக்கும் மாணவர்களுக்கு விசா வழங்குவதில் கட்டுப்பாடுகள் கொண்டுவர அவர் உத்தரவிட்டுள்ளார். இது அனைத்து நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்துவது ஆகும். இந்தியாவில் இருந்து கல்விக்காக அமெரிக்கா செல்பவர்கள் அதிகம். தமிழ்நாட்டில் இருந்து செல்பவர்களும் அதிகம்.

**மாணவர்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தி வைக்கச் சொல்லி இருக்கிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அதன்படி மாணவர் விசா வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விசா கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கும்படி அந்த நாட்டு வெளியுறவுத் துறை உத்தரவு போட்டுள்ளது.**

அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகமும், யேல் பல்கலைக் கழகமும் உலகப் புகழ் பெற்றது ஆகும். ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில்தான் முதலில் தடை போட்டார்கள். 'வெளிநாட்டு மாணவர்களை அனுமதிக்கக் கூடாது' என்று அந்தப் பல்கலைக் கழகத்துக்கு முதல் தடை விழுந்தது. அதன்பிறகு வெளிநாட்டு மாணவர்கள் அனைவருக்குமான விசா கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் மட்டும் 800 இந்திய மாணவர்கள் படிக்கிறார்கள். அமெரிக்கா முழுமைக்கும் உள்ள பல்கலைக் கழகங்களில் 3 லட்சம் இந்திய மாணவர்கள் படித்து வருகிறார்கள். 2023 ஆம் ஆண்டு மட்டும் 1 .40 லட்சம் இந்திய மாணவர்கள் கல்விக்கான விசா பெற்றுள்ளார்கள்.

கொலம்பியா பல்கலைக்கழகம், பிரவுன் பல்கலைக்கழகம், கார்னெல் பல்கலைக்கழகம், பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம், பெனிசில்வேனியா பல்கலைக்கழகம், டார்ட்மவுத் பல்கலைக்கழகம் ஆகியவை தலை சிறந்த பல்கலைக்கழகங்கள் ஆகும். உலகம் முழுவதும் இருந்து இந்தப் பல்கலைக் கழகங்களில் படிப்பதற்காக லட்சக்கணக்கான மாணவர்கள் ஆண்டு தோறும் வருகிறார்கள். இப்போது அமெரிக்க அரசால் கொண்டுவரப்படும் கட்டுப்பாடுகள், உலகம் முழுவதும் இருந்து வரும் மாணவர்களை பாதிக்கும். இது அமெரிக்காவுக்குப் பெருமை சேர்க்காது.

**உலகம் முழுவதும் இருந்து மாணவர்கள் கல்விக்காக அமெரிக்காவுக்கு வருகிறார்கள் என்பது அமெரிக்காவுக்கு பெருமைதான். அதை அந்த நாடே ஏன் சிறுமைப்படுத்திக் கொள்ள வேண்டும்?**

மாணவர்களின் புதிய விசா விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் போது அவர்களது சமூக வலைதளக் கணக்குகளில் செய்துள்ள பதிவுகளை சரிபார்க்க வேண்டும் என்று கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்களாம். **'அமெரிக்காவுக்குப் படிக்க வரும் மாணவர்களின் சமூக ஊடகக் கணக்குகளைத் தணிக்கை செய்து முடிக்கும் வரை விசா வழங்க நேரம் ஒதுக்கக் கூடாது'** என்று உத்தரவிட்டுள்ளார்கள்.

தனது நாட்டின் அரசியல் கொள்கைகளுக்கு விரோதமான எண்ணம் கொண்டவர்களாக அந்த மாணவர்கள் இருக்கிறார்களா என்பது இதன் நோக்கம் ஆகும். இப்படி ஒரு எண்ணம் கொண்டவராக அமெரிக்காவைச் சேர்ந்த மாணவரே இருந்தால் என்ன செய்வார்கள்? அவரைப் படிக்கவே கூடாது என்று தடை செய்து விடுவார்களா?

அமெரிக்காவில் கல்விக்காக விசா விண்ணப்பிக்கும் மாணவர்கள் அமெரிக்க, இஸ்ரேல் நாடுகளின் நட்பை விமர்சிக்கிறார்களா என்பது இவர்களது சோதனையின் மையக் கருவாக இருக்கிறது. இவை எல்லாம் காலத்துக்கு ஏற்ப, ஆட்சிகளுக்கு ஏற்ப மாறும் கொள்கைகள் ஆகும். அதிபர் டிரம்ப் கொள்கைக்கு மாறான ஆட்சி பின்னர் வந்துவிட்டால், இந்த வரையறைகள் கூட மாறிவிடும். அரசியல் நோக்கங்களை கல்வியில் மாணவர் எதிர்காலத்தோடு ஏன் சேர்க்க வேண்டும்?

இந்த பிரச்சினையை மிகத் தீவிரமானதாகப் பார்த்து இந்திய அரசு தனது நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். இந்திய மாணவர்களின் எதிர்காலத்தை மனதில் வைத்து செயல்பட வேண்டும். அமெரிக்காவுக்குப் படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு எந்தத் தடையும் இல்லாமல் ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டிய கடமை இந்திய அரசுக்கு உண்டு.

**ஏற்கனவே இந்தியா 'வரி நெருக்கடி'யை எதிர்கொண்டுள்ளது. இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மீதான வர்த்தக வரிகளை அதிகமாக ஆக்கியது அமெரிக்கா. அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள 'மோசமான நாடுகளில்' ஒன்றாக இந்தியாவை பட்டியலிட்டுள்ளது அமெரிக்கா. இதன் காரணமாக இந்தியா மீது 27 விழுக்காடு வரி விதித்துள்ளது அமெரிக்கா. இதுவரை 2 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்த நிலையில், இந்தியா மீது தற்போது 27 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்க சரக்குகளுக்கு இந்தியா 52 விழுக்காடு வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் குறிப்பிட்டார். இந்தியா மிகவும் கடினமான அணுகுமுறையை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மற்ற பல நாடுகள் இதனைக் கண்டித்தன. நியூயார்க் நகரிலுள்ள சர்வதேச வர்த்தக நீதிமன்றத்தில் அமெரிக்க எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 12 மாகாணங்களின் சார்பில் வழக்குப் போடப்பட்டுள்ளது. சில அமெரிக்க நிறுவனங்களும் இதற்கு எதிராக வழக்குப் போட்டுள்ளன. அதிபர் டிரம்பின் உத்தரவுக்கு இந்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

வரி நடவடிக்கையில் அமெரிக்க அதிபர் டிரம்பின் நடவடிக்கைகளுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு கடும் எதிர்வினையை ஆற்றவில்லை. மென்மையான போக்கையே கடைப்பிடித்தது. அதுபோல மாணவர்களின் விசா விவகாரத்தில் நடந்து விடக் கூடாது.

கல்வி பொதுச்சொத்து ஆகும். அதனை தடையின்றி பெற, ஒன்றிய அரசு அமெரிக்க அரசுடன் 'துணிச்சலாக' பேசி அனுமதிகளைப் பெற வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில், இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் SOL இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம், 175 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள காற்று பிரித்தெடுப்பு (Air Separation) ஆலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் மருத்துவர் பு.அலர்மேல்மங்கை, SOL இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் அல்டோ ஃப்யுமகல்லி ரொமாரியோ, திட்டத் தலைவர் கைலியோ லாவ் ஃப்யுமகல்லி ரொமாரியோ, SOL இந்தியா நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.வி.வெங்கடேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.6.2025) தலைமைச் செயலகத்தில், செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூர் கிராமத்தில் உலகத்தரத்தில் அமைக்கப்படவுள்ள பல்லுயிர் பாதுகாப்புப் பூங்கா குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி பூஜா குல்கர்ணி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத்துறை தலைவர்) ஸ்ரீநிவாஸ் ரா.ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நியாயமான தொகுதி மறுவரையறைக் கோரிக்கை!

# ஒன்றிய அரசு தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜூன் 6-**

**"நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம். ஒன்றிய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும்" என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வலியுறுத்தியுள்ளார்.**

தொகுதி மறுவரையறை குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

2026-ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்தும் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும் என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பை 2027 ஆம் ஆண்டுக்குத் தள்ளிப்போட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதித்திட்டத்தை பா.ஜ.க. வெளிப்படையாக அறிவித்துள்ளது.

தொகுதி மறுவரையறை ஆபத்து குறித்து முன்பே நான் எச்சரித்திருந்தேன். அது இப்போது நிரூபணமாகிவிட்டது. பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்துள்ளதன் மூலம், பழனிசாமி இந்தச் சதித்திட்டம் பற்றிப் பேசாமல் அமைதி காப்பதோடு, இந்தத் துரோகத்துக்குத் துணைபோகிறவராகவும் இருக்கிறார். டெல்லி ஆதிக்கத்தின் முன் அவர் அடிபணிந்துவிட்டது இப்போது தெள்ளத் தெளிவாகியுள்ளது.

நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம்! ஒன்றிய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### இளங்கலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கு

# ஜூன் - 6 முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூன் 6-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் தலைமையில் நேற்று முன்தினம் (04.06.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீடு இடப் பங்கீட்டிற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருமாறு ஆலோசிக்கப்பட்டது:

இக்கூட்டத்தில் 2025-26 ஆம் ஆண்டுக்கான இடப் பங்கீடு தொடர்பாக இறுதி செய்யப்பட்டது. மேலும் கலந்தாய்வு மற்றும் மாணவர் சேர்க்கை சீராக நடைபெற வழிமுறைகள் குறித்து வலியுறுத்தப்பட்டது. தனியார் கல்லூரிகள் கல்விக் கட்டணம் தவிர விடுதிக் கட்டணம் போன்ற பிற கட்டணங்களை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மேலும் கடந்த வருடங்களில் நீட் தேர்வு முடிவு வெளியான பின்பு தான் இளங்கலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பல்வேறு காரணங்களால் நீட் தேர்வு முடிவு வெளியாவது காலம் தாழ்த்தப்படும் பொழுது மாணவர்களின் விண்ணப்பங்களுக்கான கால அவகாசம் மிகவும் குறைந்து போகிறது. இதனால் மாணவர்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர்.

எனவே இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் இந்த ஆண்டு நீட் தேர்வு முடிந்த பிறகு மாணவர்களின் மேல்நிலைப்பள்ளி இறுதி தேர்வு முடிவு வெளியான பின்னர் பெறப்பட்டால் மாணவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிக்கப் படுவதுடன் விண்ணப்பங்கள் சரி பார்ப்பதற்கும் அதிக கால அவகாசம் கிடைக்கும். இதன் மூலம் மாணவர்களுக்கு சிரமம் குறைவதுடன் சரிபார்ப்பு பணிகளும் சிறப்பாக நடைபெற்று, இதன் மூலம் தவறான மற்றும் போலியான விண்ணப்பங் களை நீக்குவதிலும் இலகுவாக இருக்கும்.

இதனால் இந்த ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் தேதி முதல் இளங்கலை மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளுக்கான விண்ணப்பங் கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத் திற்கான கால அவகாசம் அதிகமாக இருப்பதால் மாணவர்களுக்கான சிரமங்கள் வெகுவாக குறையும். மாணவர்கள் நீட் தேர்வு மதிப்பெண்களை பதிவேற்றம் செய்ய முடியாதோ என்ற ஐயம் கொள்ள தேவையில்லை. வழக்கமாகவே மாணவர்கள் பதிவேற்றம் செய்யும் நீட் தேர்வு மதிப்பெண்கள் தேசிய தேர்வு முகமை(NTA) அளிக்கும் தரவுகளின் அடிப்படையிலேயே சரிபார்க்கப்படும். எனவே தற்போதும் மாணவர் பதிவேற்றம் செய்யும் நீட் வரிசை எண்(Roll Number) மற்றும் நீட் நுழைவுச்சீட்டு (Hall Ticket) அடிப்படையில் தேசிய தேர்வு முகமை அளிக்கும் மதிப்பெண்கள் பெறப்பட்டு இறுதி பட்டியல் வெளியிடப்படும்.

மேலும் நீட் தேர்வு முடிவுகள் வெளியான பின்னர் விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்பும் மாணவர்களுக்காக விண்ணப்பத்திற் கான கால அவகாசம் நீட்டிக் கப்படும் (குறைந்தபட்சம் நீட் தேர்வு முடிவுகள் வெளியான பிறகு 5 நாட்கள் வரை) என்று இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தேர்வுக்குழு செயலாளர் மரு.தேரணிராஜன், துணை இயக்குநர் மரு.கராமத் மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் அறந்தாங்கி அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில் ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தி.முத்து ஏற்பாட்டில் தங்க மோதிரம் மற்றும் குழந்தை உபகரணங்களை புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம், ஒன்றிய கழக செயலாளர்கள் பொன்.கணேசன், வே.பொன்துரை, சக்தி இராமசாமி, அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன், அறந்தாங்கி நகர்மன்ற தலைவர் ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் என்.வீரையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் சக்திவேல், ஹரி.விமலாதிராஜன், பாத்திமா பீவி, நா.நசுருதீன், அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பாஸ்கரன், முருகையா, அறந்த பி.செந்தில்வேலன் மற்றும் நகர வர்த்தகர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.